1979 மார்ச் 10]

திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, ஆண்டு தோறும் இந்த நகராட்சி மூலமாக அந்த மருத்துவமனைக்கு நன்கொடை கொடுக்கப்படுகிறது. எனவே, காலதாமதத்தைத் தவிர்க்க, போன ஆண்டு கொடுத்த தொகையைப் போலவே, ஒரு ஸ்டாண்டிங் ஆர்டர் போட்டு தொகையை அதிகப்படுத்தினால்தான் அரசாங்கத்தின் கவனத்திற்கு வர வேண்டியிருக்கும், எனவே, ஒரு ஸ்டாண்டிங் ஆர்டர் போட்டு—ஆண்டு தோறும் கொடுக்க வேண்டிய தொகையைக் காலதாமதம் இல்லாமல் கொடுக்க உத்தரவு போடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அரசு பரிசீலிக்கும்.

மண்பாண்டத் தொழிலாளர்கள்

*வினா எண் 327— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குலாலர், குயவர், மண்ணுடையார், கும்பாரன் என்றுள்ள மண்பாண்டத் தொழிலாளர்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் இணைத்திடும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கே இடமில்லை.

கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கான உதவித் தொகை

*வினா எண் 328—திரு. கே. சுப்ரவேலு : மாண்புமிகு அரிசன நலத் துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு அளிக்கும் உதவித்தொகை காலம் கடந்து விடுதி நிர்வாகிகளுக்கு கிடைப்பதால் மாணவ மாணவிகள் கடுமையான தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பது அரசிற்கு தெரியுமா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1979 மார்ச் 10

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : கல்லூரி வ்டுதிகளில் தங்கிப்பயிலும் பழங்குடியினர், அரிசனம் மற்றும் அதிலிருந்து மதம் மாறிய மாணவ மாணவியருக்கு அளிக்கப்படும் உதவித்தொகை உரிய காலத்தில் மாணவ, மாணவியர்க்கு வழங்கப்பட்டு விட்டதால், இம்மாணவ, மாண வியர் எவ்விதத் தொல்லைகளுக்கும் ஆளாக்கப்படவில்லை.

திரு. ஆர். சி. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, ஹையர் செகண்டரி மாணவர்கள் விடுதிகளில் தங்கிப்படிக்க வசதி செய்து கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர் களே, விடுதியில் சேர்க்க, கல்லூரி, உயர்நிலைப்பள்ளி மாணவர் களிடையே எந்தவிதமான வேறுபாடும் தற்பொழுது இல்லை.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, குடந்தைக் கல்லூரி மாணவர் விடுதியில் அடிக்கடி இப்படிப்பட்ட தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும், மற்ற வகுப்பு மாணவர் களுக்கும் தொடர்ந்து தகராறு இருந்து வருகிறது. இது அமைச் சருக்குத் தெரியும் என்று கருதுகிறேன். இதைத் தீர்க்கின்ற வகையில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குத் தனி விடுதி அமைக் கவோ அல்லது தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் மற்ற வகுப் பினருக்கும் சரியான எண்ணிக்கையில் சேரும் வகையில் அந்த விடுதியை அமைக்கவோ அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர் களே, குடந்தையில் தகராறு இருப்பது அமைச்சருக்குத் தெரி யாது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதன் மூலம் இப் பொழுது தெரிந்துகொண்டேன். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே, விடுதிகளில் எல்லா வகுப்பைச் சேர்ந்த மாணவர்களும் தங்கிப்படிக்க வேண்டுமென்ற எண்ணம் நிரம்ப யிருக்கிறது. பல விடுதிகளில் தாழ்த்தப்பட்ட மாணவர்களையும் பின்தங்கிய மாணவர்களையும் சமமாக இப்பொழுது சேர்த்திருக் கிறோம். வருங்காலத்தில் இதுபோன்ற தகராறுகள் ஏற்படாமல் இருப்பதற்காக சட்டமன்ற உறுப்பினர்களைப் போன்றவர்கள் முயற்சியெடுப்பது நல்லது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, கல்லூரி விடுதி களில் தங்கிப்படிக்கும் மாணவர்களுக்காக வரையறுக்கப்படும் உதவித் தொகையைத் தனியார் கல்லூரி நிர்வாகத்தினர் வாங்கிக் கொண்டு, அதிகமாக உணவுக் கட்டணத்தை வைத்து, ஆறு மாதங்களுக்குள்ளேயே செலவழித்து விடுகிறார்கள். அது மாண வர்களின் கைகளில் கிடைப்பதில்லை. ஆகவே, மீண்டும் தங்கள்

[1979 மார்ச் 10]

பணத்தைச் செலவழித்து மாணவர்கள் சாப்பிட வேண்டியதாக யிருக்கிறது. வேறு மாநிலங்களில் அவர்கள் சாப்பாட்டிற்காக ஆகும் முழுச் செலவையும் அரசாங்கம் கொடுக்கிறது. அந்த மாதிரியாவது செய்ய வேண்டும். அல்லது கொடுக்கும் பணத்தைக் கொண்டு, நியாயமான முறையில் உணவுக்கான கட்டணத்தை விதிக்கும் முறையில் தனியார் கல்லூரி நிர்வாகிகளைக் கட்டுப்படுத்தியாக வேண்டும். இவைகளைச் செய்ய அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் ஒவ்வொரு மாதமும் இவ்வளவுதான் வழங்கவேண்டுமென்று ஒரு விதிமுறையிருக்கிறது. மத்திய அரசாங்கம் ஒரு தொகையையும் மாநில அரசாங்கத்தில் இவ்வளவுதான் தரவேண்டுமென்று நிர்ணயமும் இருக்கிற காரணத்தால் அதற்கு ஏற்பத்தான் மாணவர்களுக்குப் பணம் வழங்கப்படுகிறதே தவிர, அவர்கள் உணவுக்காக எவ்வளவு செலவிடுகிறார்கள் என்பதைத் தற்பொழுது கணக்கிடுவதற்கில்லை. இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலும் மாணவர்களுக்குரிய உபகாரச்சம்பளத்தை அந்தந்தக் கல்லூரி அல்லது உயர்நிலைப்பள்ளி நிறுவனங்களுக்கு தந்து விடுகிறோம். அவர்கள்தான் மாணவர்களுக்கோ, விடுதிகளுக்கோ தருகின்ற முறை பின்பற்றப்பட்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, அரிசன மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகிற ஸ்காலர்ஷிப் பாரம் வள, வள என்று 15, 16 பக்கங்கள் இருக்கின்றன. ஆகவே, அதைச் சுருக்கி வெளியிட அரசு ஆவன செய்ய முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒருவேளை 'பேப்பரை' வழவழப்பு என்று சொல்கிறாரா ? அல்லது பக்கங்கள் நீண்டிருக்கிறது என்று சொல்கிறாரா என்று தெரியவில்லை. ஒருவேளை அவர்கள் பக்கங்கள் நீண்டிருப்பதாகச் சொல்வார்களானால், இந்த அரசாங்கம், பொறுப்பேற்ற பிறகு மாநில அரசாங்கம் வழங்குகிற உபகாரச்சம்பள படிவங்களை 4 பக்கங்களாகச் சுருக்கி இருக்கிறோம். மத்திய அரசாங்கம் தருகிற உபகாரச் சம்பளத்திற்கு மத்திய அரசாங்கம்தான் படிவங்களின் பக்கங்களைக் குறைக்கவேண்டும். அதற்குரிய நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுக்கும்.